1982 மார்ச் 18]

இதுசம்பந்தமாகப் பரிசீலனை செய்து இப்படி இரப்பர் பயிரிடப் பட்டு ஏழைகளைப் பாதிக்கும் நிலையைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இது வரைக்கும் அம்மாதிரி புகார் எதுவும் வரவில்லை. வேண்டு மானால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையில் அரசு ஆராயும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நஞ்சை நிலங்களில் இரப்பர் மட்டுமல்ல; சில பகுதிகளில் நெல்லுக்கான உற்பத்தி விலை சரியாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் சவுக்கு போட்டு பலன் அடைய விரும்புகிறார்கள். இப்படி மற்றப் பொருட்களைப் பயிரிடுவதால் உணவு உற்பத்தி அதிகம் பாதிக்கப்படும் என்பதால் நெல் பயிரிடுகின்ற இடத்தில் வேறு எந்தப் பயிரும் பயிர் செய்யக்கூடாது என்று அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவ்வாறு கட்டுப்படுத்த இயலாது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இரப்பர் பயிரிடப் படுகிறது என்கின்ற வகையில் மூலக் கேள்வி கேட்கப்பட்டிருக் கிறது. வேறு இடத்தில் ஏதாவது புகார் இருந்தால் அதைக் குறித்து அந்தக் குறிப்பிட்ட புகாருக்குரிய இடத்தைப் பற்றி ஆராயலாம்.

திரு. மு. அம்பிகாபதி: சவுக்கு ஒரு கிலோ 55 காசாகவும், வேலிக்கருவு ஒரு கிலோவிற்கு 45 காசாகவும், கரும்பு ஒரு கிலோ 18 அல்லது 20 காசாகவும் இருக்கிறது. விவசாயிகள் எதைப் பயிரிடுவார்கள் என்று அமைச்சரவர்களை வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே. கேள்வி இரப்பரைப் பற்றியது. சவுக்கையும் கரும்பையும் இரப்பரா இழுத்தால் நான் பதில் சொல்ல முடியாது.

குண்டாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம்

*வினா எண். 537— திரு. எம். பிச்சை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி திருச்சுழி—மண்டல மாணிக்கம் நெடுஞ்சாலையில் குண்டாற்றின் குறுக்கே திருச்சுழி அருகாமையில் உள்ள தரைப்பாலத்திற்குப் பதிலாக மேம்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ): தற்போதுள்ள தரைப்பாலத்திற்குப் பதில் மூழ்குப்பாலம் கட்டப்படுகிறது. பணி 31-5-82-க்குள் முடிவடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. எம். பிச்சை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பாலம் கட்டுவதை நான் அறிவேன், மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பாலம் 74-75-ஆம் ஆண்டு திட்டமிட்டுக் கட்டப்பட்டது. திட்டத்தைப் பரிசோதித்துச் சரியான முறையில் புள்ளி விவரங்களை சேகரிக்காமல் அரசுப் பணத்தை வீண் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, திருத்திய மதிப்பீடு மூன்றரை இலட்சம் ரூபாயாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. வேலைகள் முடிந்ததற்குப் பின்னாலே அதுபற்றி ஆலோசனை செய்யும்.

Encroachment of the Road between Palkulam Junction and Black Rock Estate in Thovalai Taluk

*Q. No. 538—Thiru P. VIJAYARAGHAVAN: Will the Hon Minister for Local Administration be pleased to state—

(a) Whether the Government is aware of the encrochment of the Panchayat Road connecting Palkulam Junction to Black Rock Estate in Thovalai Taluk in Kanyakumari District: and

(b) if so, the action taken by the Government to remove the encroachment

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) சாலையின் இரு மருங்கிலும் 5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆக்கிரமிப்பு உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றொரு இடத்தில் தேவகிரிப்பண்ணை உரிமையாளரால் இப்பாதையின்